தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 ஆகஸ்ட் 21.

ஆவணி 5, துன்மதி திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10—30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வகை அறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகை அறிந்த தூய்மை அவர்.''

சொற்களைத் தொகுத்து உரைக்கும் முறையினை அறிந்த தூய்மை உள்ளம் வாய்ந்தவர்கள், அவையோரின் இயல்புகளை முதலில் நன்கு அறிந்து கொள்ளுவர். அவையில் பேசும்போது வலியுறுத்திப் பேச வேண்டியவற்றை, அச்சங்காரணமாக வாய் தவறிப் பிழை உண்டாக்குமாறு அவர்கள் பேசமாட்டார்கள்.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

1. இரங்கல் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர் திரு. டி. அனந்த பாய் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. டி. அனந்தபாய் அவர்கள் 29—5—1981 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 21

திரு. டி. அனந்தபாய் அவர்கள் 1952-ஆம் ஆண்டு உடுப்பி தொகுதியிலிருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று, 1956 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முடிய, அதாவது மாநிலங்கள் திருத்தியமைத்தல் சட்டம் அமலுக்கு வரும்வரையில் பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். பின்னர், மைசூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 1957 வரை தொடர்ந்து இருந்தார். இவர் 1972 ஆம் ஆண்டில் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பெற்று 1972 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை மத்திய அமைச்சராகவும், பின்னர் 1977 ஆம் ஆண்டு மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று 1979–80ஆம் ஆண்டில் மீண்டும் மத்திய அமைச்சராகவும் இருந்தார்.

திரு. பாய் அவர்கள், சிண்டிகேட் வங்கியின் தலைவராகப் பணியாற்றி உடுப்பி மாவட்டம் முழுவதும் இருந்த அடகுக் கடைகளை மூடும்வண்ணம் செயல்பட்டு மக்களுக்குத் தொண்டு செய்தார். பின்னர் ஆயுள்காப்பீட்டுக் கழகத்தின் தலைவராக இருந்தபொழுது, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் வீடு கட்ட சிறந்த உதவியைச் செய்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.